தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# ‘வனமரபியலில் தாக்கத்தை ஏற்படுத்தியவர் கேதார்நாத்’

**கோவை, டிச.1–**

இந்திய வனமரபியலின் தந்தை என போற்றப்படும் கேதார்நாத்தின்நினைவு சொற்பொழிவு, கோவை இந்திய வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு மையத்தில் நடந்தது. இது, அவரின் நூற்றாண்டு சிறப்பு நிகழ்வாகவும் அனுசரிக்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு, மையத்தின் இயக்குனர் குன்னிகண்ணன் தலைமை வகித்தார். இந்திய வன ஆராய்ச்சி மற்றும் கல்விக் குழு தலைமை இயக்குனர் ராவத் சிறப்புரையாற்றுகையில், "இந்தியாவில் தேக்கு, சந்தனம், பைன், யூகலிப்ட்ஸ் மரங்களில் மரபணு மேம்பாட்டுத் திட்டங்களைத் தொடங்கி வைத்தவர் கேதார்நாத். சக விஞ்ஞானி மேத்யூஸ் உடன் இணைந்து, இந்தியாவில் முறைசார்ந்த மற்றும் அறிவியல் ரீதியான வன மரங்கள் மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொண்டார்.

இது, வெப்பமண்டல மரப்பெருக்கு முறையில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியது. ஓய்வு பெற்ற பிறகும், கேரள வன ஆராய்ச்சி மையம், கோவையில் இந்திய வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு மைய வளர்ச்சிகளில் பெரும்பங்காற்றினார்,'' என்றார். நிகழ்ச்சியில், முதுநிலை முதன்மை விஞ்ஞானி கண்ணன் வாரியர், விஞ்ஞானிகள் நாகராஜன், யசோதா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

67. News in Dinamalar, 01.12.2021, Coimbatore, Dr S. Kedharnath Memorial Lecture.